தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, பெண்ணாடம் லோட்டஸ் பள்ளியில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைத்து முகாமில் தேர்ச்சி பெற்ற மாணவ – மாணவியர்களுக்கு பணி நியமன ஆனையினை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் சார்பில்

32 இணைகளுக்கு திருமண விழா- துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,செப்.14- இந்து சமய அறநிலையத் துறையில் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் சார் பில் 32 இனைகளுக்கான திரு மண விழாவினை 14/9/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி அளவில் சென்னை ராஜா அண்ணாமலைபுரம், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடை பெறும் திருமண விழாவில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலை யத்துறை செயலாளர் டாக் டர் மணிவாசன் இ ஆ ப வர வேற்கின்றார்.

இந்த திருமண விழாவில் 32 இணையர்களுக்கான திரு மணத்தை மாண்புமிகு தமிழ் நாடு துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

மேலும் இந்த திருமண விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்ரமணியன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப் பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், மயிலை சட்ட மன்ற உறுப்பினர் திரு மயிலை தா வேலு, சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் மு மகேஷ் குமார், சென்னை பெருநகர மாநகராட்சி ஒன்பதாவது மண்டல குழு தலைவர் எஸ். மதன் மோகன் ஆகியோர் வாழ்த்துரைகின்றார்கள்.

இத்திருமண விழாவில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திருப்பி என் ஸ்ரீதர் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை கூடு தல் ஆணையர் டாக்டர் சி பழனி வருகை தந்து வாழ்த்தி யவர்களுக்கும் மணமக்கள் வீட்டார் களுக்கும் நன்றி கூறுகிறார்கள்.

ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கொடுமுடி ஒன்றியத்தில் கிளாம்பாடி பேரூராட்சியில் விவசயிகளிடமிருந்து வந்த நீண்ட நாள் கோரிக்கையான மின்சார துறையில் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்து அதை கே.இ.பிரகாஷ் எம்.பி. கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள், மின்சாரத்துறை அதிகாரிகள் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 206 வது நாள்

கொளத்தூர் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, செப். 14 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார் பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங் கள்” மாபெரும் திட்டத்தின் 206 ஆம் நாளான - கழகத்தலை வர் தமிழ்நாடு முதல மைச்சர் அ வ ர் க ளி ன் இ னி ய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (13.09.2025), கொள த்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 70 அ, சத்யா நகர், அயன்புரம் பஸ் நிலையம் அருகில். 2) வட் டம் 67 மல்லிப்பூ நகர், தீட்டி தோட்டம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தை

யும் யாருக்காவும், எதற்காக வும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடு வோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறு திமொழியை ஏற்று பொதுமக்க ளுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்கு மார், தேவஜவகர், சரிதா மகேஷ்கு மார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம. அசோக்கு மார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தன சேகர், டி.யோகப்பிரியா, என். தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட செயலாளர் கள் பி.ஊமைத்துரை, கே.பி. ஆதவன்மணி, என்.பொன் முடி, கே.ஜார்ஜ்குமார், பி. டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங் கி ணை ப் பா ள ர் க ள் : சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜய குமார், ம.அசோக்கு மார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், அன்பரசன், ஆத வன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண் டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் மத்திய - தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

படப்பை ஆ.மனோகரன் –திருமுடிவாக்கம் இ.மணி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப். 14 - குன்றத்தூர் தெற்கு ஒன்றி யச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன், மத்திய ஒன் றியப் பொறுப்பாளர் திருமு டிவாக்கம் இ.மணி ஆகி யோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

குன்றத்தூர் மத்திய மற் றும் தெற்கு ஒன்றிய தி.மு.க. கழக நிர்வாகிகள் ஆலோச னைக் கூட்டம் இன்று (14.09.2025 - ஞாயிற்றுக்கி ழமை) காலை 10.00 மணி, தில்லை மகால், படப்பை யில் நடைபெறுகிறது.

இ க் கூ ட் ட த் தி ல் குன்றத்தூர் தெற்கு ஒன்றி யச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் மத்திய ஒன் றிய பொறுப்பாளர் திருமுடி வாக்கம் இ.மணி வரவேற்கி றார்.

ஒன்றிய கழக நிர்வாகி கள் மு.சுப்பிரமணி, வ.நந்த கோபால், வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மூ . ர ா ஜ ே ந் தி ர ன் , மா.பரிமேலழகன் ஆகி யோர் முன்னிலை வகிக்கின் றனர்.

இக்கூட்டத்தில் குறு- சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்ப ரசன் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

தொகுதி தேர்தல் மேற் பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம். குன் றத்தூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் (எ) ஒன்றியச் செயலாளர் ஏ.வந் தேமாதரம், குன்றத் தூர் ஒன்றியக் குழு துணைப் பொருந்தலைவர் உமாம கேஸ்வரி வந்தேமாதரம் உள் ளிட்டோர் பங்கேற்கின்ற னர்.

இக்கூட்டத்தில் குன்றத் தூர் தெற்கு - மத்திய ஒன்றி யங்களில் அடங்கியுள்ள மாவட்ட - ஒன்றிய அணிக ளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள் ளாட்சி மன்றப் பிரதிநிதி கள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள் பி.எல்.ஏ. -2, வாக்குச்சாவடி இ.முக வர் கள் பி.டி.ஏ. உள்ளிட்டோர் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட் டுக்கொள்கிறோம்.

ப.அறிவொளி , அ.ஜமீர் ஆ கி யோ ர் ந ன் றி கூறுகின்றனர்.

பொருள்: செப்டம்பர் - 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் 117ஆவது பிறந்த நாள் விழா,

செப்டம்பர் - 15 பாகம் வாரியாக கூட்டம் மற்றும் உறுதிமொழி ஏற்பு,

செப்டம்பர் 17 கரூரில் முப்பெரும் விழா, கழக வளர்ச்சிப் பணி.

இவ்வாறு அவர்கள் தெரி வித்துள்ளனர்.

பேரறிஞர் அண்ணா 117 வது பிறந்த நாள் – செப்.15 அன்று

சென்னை வடக்கு மாவட்டத்தில் உள்ள 703 பாகங்களில் உறுதி மொழி ஏற்பு!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிக்கை !

சென்னை, செப். 14 - தமிழ்நாடு முதலமைச்சர் கழ கத் தலைவர் அவர்கள், மாவட் டக் கழகச் செயலாளர்கள் கூட் டத்தில் அறிவித்தபடி சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே.நகர் சட்ட மன்ற தொகுதிகளில் அமைந் துள்ள 703 வாக்குச் சாவடிகளி லும், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளான செப்டம்பர் 15 திங்கட் கிழமை அன்று பாகம் வாரியாக பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., பி.எல்.சி. ஆகியோர் பங்கேற்கும் வாக்குச் சாவடி கூட்டங்களை நடத்தி, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் படி கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்த குடும்பங்களை அழைத்து அவர் களையும் பங்கு பெறச் செய்து அக்கூட்டங்களில் அனைவரும் இணைந்து உறுதி மொழி ஏற்றி டவேண்டும் என்று மாவட்டக் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சேகர்,எம்.எல்.ஏ விடுத்து ள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலை மையில் காணொலி மூலமாக மாவட்டக் கழகச் செயலாளர் கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கழகத் தலை வர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத் தாய்ப்பான அறிவிப்பினை அறி வித்தார். கழகத் தலைவர் அவர் களின் அறிவிப்பின் படி செப்டம்பர் 15 திங்கட்கிழமை அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள 68 ஆயிரம் வாக் குச்சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் ஒன்று கூடி மண், மொழி, மானம் காப் பதற்கான உறுதி மொழியை முன் மொழிய வேண்டும். ஒவ் வொரு பாகத்திலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங் களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும்.

என் வாக்குச்சாவடி, வலி மையான வாக்குச்சாவடி, என் பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த பாகத்திற்கு உட்பட் மாநில, மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி யினர் கட்டாயம் வாக்குச்சா வடி கூட்டங்களை நடத்திடு வது மட்டுமின்றி உறுதி மொழியையும் ஏற்றிட வேண் டும்.

குறிப்பாக பி.எல்.ஏ.2, பி.டி.ஏ., பி.எல்.சி, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்த பட்சம் 100 பேர்களா வது ஒவ்வொரு கூட்டங்களி லும் கலந்து கொள்ளும் வகை யில் கழக நிர்வாகிகள் வழி காண வேண்டும்.

காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது திருவு ருவப் படத்திற்கு திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணி வித்து இனிப்பு வழங்கி கொண்டா டுவது மட்டுமின்றி, அவ்விடத்திலே அனைவரும் உறுதி மொழி ஏற்றிடும் வகை யில் நிகழ்ச்சி களை அமைத்திட வேண்டும். நமது சென்னை வடக்கு மாவட்டத்தில் 703 பாகத்திலும் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியை அனைவரும் ஒன்றி ணைந்து நடத்திட வேண்டு மாய் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் உறுதி மொழி ஏற்றிடும் வாசகம்.

நான், தமிழ்நாட்டின் நாடா ளுமன்ற உறுப்பினர்களின் விகி தாசாரத்தைக் குறைக்கும் நியா யமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட் டைத் தலைகுனிய விடமாட் டேன் என உறுதி ஏற்கிறேன். நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ் நாட்டு மக் களின் வாக்குரிமையைப் பறிக் கும் அரசுக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாடேன் என உறுதி ஏற்கி றேன்.

நான், நீட் மற்றும் இளைஞர் களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற் பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போரா டுவேன். ஒரு போதும் தமிழ் நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என உறுதி ஏற்கிறேன். நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெரு மைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனியவி டமாட்டேன் என உறுதி ஏற்கி றேன்.

நான், பெண்கள்விவசாயி கள்மீனவர்கள்நெசவாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக் காகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன் என உறுதி ஏற்கிறேன்.

என்று நாம் ஒவ்வொருவ ரும் தமிழ்நாட்டினை மேம்ப டுத்திட, தமிழ் நாட்டை பாது காத்திட, தமிழ் மக்களின் உரிமையை பாதுகாத்திட நமது கழகத் தலைவர் அவர்களின் வழியில் இவ்வாறு உறுதிமொ ழியை ஏற்று; வரும் 2026 சட்ட மன்றத் தேர்தலில் மீண்டும் முத லமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் திரா விட மாடல் அரசு அமைய பேர றிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழி ஏற்பதோடு இத னையே நாம் அனைவரும் சபத மாக ஏற்க வேண்டுமாய் கேட் டுக் கொள்கிறேன்

மேலும் செப்டம்பர் 15 அன்று பகுதி, வட்ட கழகத்திற் குட்பட்ட வாக்குச்சாவடி முக வர்கள் மற்றும் ஓரணியில் தமிழ் நாடு திட்டத்தின் மூலம் கழத்தில் இணைந்த குடும்பத்தி னைரையும் அழைத்து; நமது சென்னை வடக்கு மாவட்டத் தில் அடங்கிய 703 பாகத்திலும், கழக நிர்வாகிகள், 100 பேர் களை அழைத்து உறுதிமொழி எடுத்துக்கொள்வதோடு, அவர் களுக்கு சிற்றுண்டி குடிநீர் உள் ளிட்ட அடிப்படை வசதிகளை யும் செய்து கொடுத்திட வேண்டுமாய் கழக நிர்வாகி களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், . அறிக்கை விடுத்துள்ளார்.

பல்லாவரம் வடக்கு – தெற்கு பகுதிக் கழக செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா பெருந்தகை பிறந்தநாள் விழா வாக்குச்சாவடிகள் தோறும் வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்தி உறுதிமொழி ஏற்பது குறித்து ஆலோச னைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். உடன் பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, இ. எஸ்.பெர்னார்ட், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் , பகுதி கழக நிர்வாகி கள் வை.த.ரா. மூர்த்தி, இரா. சேகர், ஈ. வெங்கடேசன், பி.மீனா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்கத்தினர் அணி திரண்டு வாரீர் !

தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம் அறிக்கை !

சென்னை, செப். 14 - தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண் முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை பேரறி ஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாள் விழா வினை முன்னிட்டு சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள பெருந்தகை அண்ணா அவர்களின் திருவு ருவச் சிலைக்கு மாலை அணி வித்து, மரியாதை செலுத்திட கழகத்தின் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் 15.09.2025 திங்கட் கிழமை அன்று காலை 7.00 மணியளவில் வருகை தருகி றார்.

அண்ணா அவர்களின் புகழ் பாடவும், கழகத் தலை வர் அவர்களை வரவேற்க வும், தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்கங்களின் நிர் வாகிகள் மற்றும் தொழி லாளர்கள் கருப்பு, சிவப்பு சீருடை அணிந்து தொ.மு.ச. பேரவை கொடியோடு அணி வகுத்திட வேண்டுமாய் அன் புடன் கேட்டுக் கொள்கி றோம்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் பொதுமக்கள் வழங்கிய கோரிக்கையின்படி

காஞ்சிபுரம் முதல் சென்னை வரை குளிர் சாதனப் பேருந்து இயக்கம்!

அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்தார்! க.சுந்தர் எம்.எல்.ஏ.- க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப். 14 - காஞ்சிபுரம் மக்களின் நீண் டநாள் கோரிக்கையான காஞ் சிபுரம் - சென்னை போக்குவ ரத்திற்கு குளிர்சாதன பேருந்து வேண்டும் என்பதை வலியு றுத்தி, தி.மு.கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், காஞ்சிபு ரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஆகியோர் முன் னிலையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி , பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடிய சென்னை செல்லும் குளிர்சாதன பேருந்தை, காஞ் சிபுரம் நாடாளுமன்ற உறுப்பி னர் க.செல்வம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக செய லாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., மற்றும் காஞ்சிபுரம் சட்ட மன்ற உறுப்பினர் சி.வி.எம். பி.எழிலரசன் ஆகியோர் முன் னிலையில், கடந்த 09.09.2025 அன்று காஞ் சிபுரத்திற்கு நலத்திட்ட உதவி கள் வழங்கவும், ஆய்வுக்காக வருகைத் தந்த துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்.

தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விரைந்து வழங்கிய ஒப்புதலை அடுத்து, தமிழ் நாடு முதலமைச்சர் அவர்க ளின் உத்தரவின் அடிப்படை யில், (12.09.2025) அன்று மாலை 05.00 மணியளவில், காஞ்சிபுரம் பேருந்து நிலையத் திலிருந்து, காஞ்சிபுரம் - சைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியர், மாவட்டப் பொரு ளாளர் சன்பிராண்ட் கே. ஆறு முகம், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், பகு திக் கழக செயலாளர்கள் கே. திலகர், எஸ்.சந்துரு, அ.தசர தன், சு.வெங்கடேசன், காஞ்சி புரம் ஒன்றியக்குழு பெருந்த லைவர் திருமதி மலர்கொடி குமார், தலைமைக்கழக செயற் குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகு மார், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, வட்ட, கிளை வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி களின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், போக்குவரத்து துறை அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

திருவல்லிக்கேணி பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, செப். 14 - திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி. எம்.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட் டம், திருவல்லிக்கேணி பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழ கச் செயலாளர்கள் ஆலோச னைக் கூட்டம் இன்று (14.09.2025 ஞாயிற்றுக்கி ழமை) காலை 10 மணி அள வில், பகுதிக் கழக அலுவலகம், எண். 28 / 20 கஜடி பேகம் தெரு, இராயப்பேட்டையில் நடைபெறுகிறது. பகுதி அவைத் தலைவர் ம.தயாநிதி தலைமை வகிக்கிறார்.

வி.பி.பொன்னரசு, ஆர். என்.துரை, அ.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, கமலா செழியன், ரவி ராஜ்கு மார், எம்.கே.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செய லாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற் றும் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பா ளர்கள், துணை அமைப்பாளர் கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொள்கிறேன்.

பொருள்: பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாள் விழா குறித்தும், தி.மு.க. முப்பெரும் விழா குறித்தும் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காம ராஜ் தனது அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

மயிலை கிழக்குப் பகுதி இளைஞரணிக்கு புதியதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் கூட்டம்!

மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, செப். 14- கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களு டன் இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதிஸ் டாலின் அவர்களால் நியமிக் கப்பட்ட சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. பரிந்துரையில் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க .இளைஞர் அணி புதியதாக நியமிக்கப்பட்ட வட்ட அமைப்பாளர் துணை அமைப் பாளர் பாக அமைப்பாளர்

அறிமுக ஆலோசனைக் கூட்டம் இன்று (14.09.2025 ஞாயிற்றுக்கிழமை) அண்ணா அறிவாலயத்தில் மாலை 3 மணியளவில் நடைபெறுகிறது.

துணை முதல்வர் இளைஞ ரணி செயலாளர் உதயநிதிஸ் டாலின் கலந்து கொண்டு சிறப் புரையாற்ற உள்ளார்.

மயிலைப் பகுதியை சார்ந்த இளைஞர் அணி அமைப்பா ளர் துணை அமைப்பாளர்கள் இன்று நடைபெறும் ஆலோச னைக் கூட்டத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளை, மாலை 3 மணி அளவில் அண்ணா அறி வாலயத்திற்கு அழைத்து வரும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வட்டக் கழக செயலாளர்கள் மயிலை கிழக்குப் பகுதியை சார்ந்த மாவட்ட. பகுதி, வட்ட, பாக, அனைத்து இளைஞரணி நிர்வா கிகளும் கலந்து கொண்டு சிறப் பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலா ளர் எஸ் முரளி தெரிவித் துள்ளார்.